கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2015/2016 (யூன் 2017)

## SAS 4113 Anthropological Approach to state and Ethnic conflict

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**முதலாம் பகுதியில் இருந்து மூன்று வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியில் இருந்து ஒரு வினாவிற்கும் எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

---

### பகுதி – I

01. (அ) 'முரண்பாடு' (conflict) என்னும் எண்ணக்கருவை வரையறுத்து சமூக மானிடவியல் புலத்தில் அதன் முக்கியத்தவத்தை எடுத்து விளக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) முரண்பாடு குறித்த சமூகக் கட்டமைப்பினுள் தோற்றுவிக்கும் சமூக செயற்பாடுகளை விபரிக்குக.

(13 புள்ளிகள்)

02. (அ) ஓர் இனத்துவம் (Ethnicity) கொண்டிருக்கும் குணாம்சங்களாக அன்ரனி ஸ்மித் (Anthony smith) பிரேரிக்கும் விடயங்களை தெளிவாக விளக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) ஓர் இன அடையாளத்துவத்தின் உருவாக்கம் குறித்த இரு சிந்தனை பள்ளிகளின் சிந்தனைப் போக்குகளை ஒப்பிட்டு விளக்குக.

(13 புள்ளிகள்)

03. (அ) "சமதானம்" என்னும் எண்ணக்கரு தொடர்பிலான சமூக மானிடவியலாளர்களின் (Social Anthropologists) கருத்துக்களை தெளிவ்படுத்துக.

(12 புள்ளிகள்)

(ஆ) சமாதானக் கற்கைகள் பெற்றுவரும் முக்கியத்துவத்தை சுருக்கமாக எடுத்துரைத்து அவை மானுடவியல் கல்விப்புலத்தோடு கொண்டிருக்கும் தொடர்பினையும் விபரிக்குக.

(13 புள்ளிகள்)

04. அதிகாரம் தொடர்பான பின்வரும் கோட்பாட்டுப் பார்வைகளை அவற்றின் கருத்தியல் அடிப்படையில் விபரிக்குக.

(அ) செயற்பாட்டுவாதப் பார்வை (12 புள்ளிகள்)

(ஆ) முரண்பாட்டு வாதப் பார்வை (13 புள்ளிகள்)

## பகுதி – II

05. சமகாலத்தில் இன ரீதியான முரண்பாடுகள் தேசியவாத பிரச்சினைகளுக்கு ஏதுவாகும் தன்மையினை பொருத்தமான எடுத்துக்காட்டு ஒன்றினை ஆதாரமாகக் கொண்டு மதிப்பீடு செய்க.
(25 புள்ளிகள்)

06. "எல்லா சமூக முறைமைகளும் அரசாங்கங்களை (Governments) கொண்டிருக்கவில்லை; ஆனால் அனைத்துச் சமூகங்களும் அரசியல் முறைமைகளைக் (Political System) கொண்டிருந்தன." இக்கருத்தினை மானுடவியல் ஆய்வுகளை ஆதாரமாகக் கொண்டு ஆராய்ந்து நிருபணம் செய்க.
(25 புள்ளிகள்)

*****